ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ போய்ப்பாடு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ போய்ப்பாடு ॥

## பன்னிருநாமப் பெருமை காது குத்தல்

‡போய்ப்பாடுடைய நின் தந்தையும் தாழ்த்தான்⋆
    பொரு திறல் கஞ்சன் கடியன்⋆
காப்பாரும் இல்லை கடல்வண்ணா⋆ உன்னைத்
    தனியே போய் எங்கும் திரிதி⋆
பேய்ப்பால் முலை உண்ட பித்தனே!⋆ கேசவ
    நம்பீ! உன்னைக் காது குத்த⋆
ஆய்ப் பாலர் பெண்டுகள் எல்லாரும் வந்தார்⋆
    அடைக்காய் திருத்தி நான் வைத்தேன் (1)

வண்ணப் பவள மருங்கினில் சாத்தி⋆
    மலர்ப்பாதக் கிங்கிணி ஆர்ப்ப⋆
நண்ணித் தொழும் அவர் சிந்தை பிரியாத⋆
    நாராயணா! இங்கே வாராய்⋆
எண்ணற்கரிய பிரானே⋆ திரியை
    எரியாமே காதுக்கிடுவன்⋆
கண்ணுக்கு நன்றும் அழகும் உடைய⋆
    கனகக் கடிப்பும் இவையாம் (2)

வையம் எல்லாம் பெறும் வார் கடல் வாழும்⋆
    மகரக் குழை கொண்டு வைத்தேன்⋆
வெய்யவே காதில் திரியை இடுவன்⋆ நீ
    வேண்டியதெல்லாம் தருவன்⋆
உய்ய இவ்வாயர் குலத்தினில் தோன்றிய⋆
    ஒண் சுடர் ஆயர் கொழுந்தே⋆
மையன்மை செய்திள ஆய்ச்சியர் உள்ளத்து⋆
    மாதவனே! இங்கே வாராய் (3)

www.prapatti.com

வண நன்றுடைய வயிரக் கடிப்பிட்டு⋆
    வார் காது தாழப் பெருக்கி⋆
குண நன்றுடையர் இக்கோபால பிள்ளைகள்⋆
    கோவிந்தா! நீ சொல்லுக் கொள்ளாய்⋆
இணை நன்றழகிய இக்கடிப்பிட்டால்⋆
    இனிய பலாப் பழம் தந்து⋆
சுண நன்றணி முலை உண்ணத் தருவன் நான்⋆
    சோத்தம் பிரான்! இங்கே வாராய் (4)

சோத்தம் பிரான்! என்றிரந்தாலும் கொள்ளாய்⋆
    சுரி குழலாரொடு நீ போய்⋆
கோத்துக் குரவை பிணைந்திங்கு வந்தால்⋆
    குணம் கொண்டிடுவனோ நம்பீ⋆
பேர்த்தும் பெரியன அப்பம் தருவன்⋆
    பிரானே! திரியிட ஒட்டில்⋆
வேய்த் தடந் தோளார் விரும்பு கருங்குழல்⋆
    விட்டுவே! நீ இங்கே வாராய் (5)

விண் எல்லாம் கேட்க அழுதிட்டாய்!⋆ உன்வாயில்
    விரும்பி அதனை நான் நோக்கி⋆
மண் எல்லாம் கண்டென் மனத்துள்ளே அஞ்சி⋆
    மதுசூதனே என்றிருந்தேன்⋆
புண் ஏதும் இல்லை உன் காதும் அறியும்⋆
    பொறுத்திறைப் போதிரு நம்பீ!⋆
கண்ணா! என் கார் முகிலே!⋆ கடல் வண்ணா
    காவலனே! முலை உணாயே (6)

முலை ஏதும் வேண்டேன் என்றோடி⋆ நின் காதில்
    கடிப்பைப் பறித்தெறிந்திட்டு⋆
மலையை எடுத்து மகிழ்ந்து கல் மாரி
    காத்துப்⋆ பசுநிரை மேய்த்தாய்⋆
சிலை ஒன்றிறுத்தாய்! திரிவிக்கிரமா!⋆
    திருவாயர் பாடிப் பிரானே!⋆

www.prapatti.com

தலை நிலாப் போதே உன் காதைப் பெருக்காதே⋆
    விட்டிட்டேன் குற்றமே அன்றே (7)

என் குற்றமே என்று சொல்லவும் வேண்டா காண்⋆
    என்னை நான் மண் உண்டேனாக⋆
அன்புற்று நோக்கி அடித்தும் பிடித்தும்⋆
    அனைவர்க்கும் காட்டிற்றிலையே⋆
வன் புற்றரவின் பகைக் கொடி⋆ வாமன
    நம்பீ! உன் காதுகள் தூரும்⋆
துன்புற்றன எல்லாம் தீர்ப்பாய் பிரானே!⋆
    திரியிட்டுச் சொல்லுகேன் மெய்யே (8)

மெய் என்று சொல்லுவார் சொல்லைக் கருதித்⋆
    தொடுப்புண்டாய் வெண்ணெயை என்று⋆
கையைப் பிடித்துக் கரை உரலோடென்னைக்⋆
    காணவே கட்டிற்றிலையே⋆
செய்தன சொல்லிச் சிரித்தங்கிருக்கில்⋆
    சிரீதரா! உன் காது தூரும்⋆
கையில் திரியை இடுகிடாய்⋆ இந்நின்ற
    காரிகையார் சிரியாமே (9)

காரிகையார்க்கும் உனக்கும் இழுக்குற்றென்⋆
    காதுகள் வீங்கி எறியில்⋆
தாரியா தாகில் தலை நொந்திடும் என்று⋆
    விட்டிட்டேன் குற்றமே அன்றே⋆
சேரியிற் பிள்ளைகள் எல்லாரும்⋆ காது
    பெருக்கித் திரியவும் காண்டி⋆
ஏர் விடை செற்றிளங்கன்றெறிந்திட்ட⋆
    இருடீகேசா! என்தன் கண்ணே! (10)

கண்ணைக் குளிரக் கலந்தெங்கும் நோக்கிக்⋆
    கடி கமழ் பூங்குழலார்கள்⋆
எண்ணத்துள் என்றும் இருந்து தித்திக்கும்⋆
    பெருமானே! எங்கள் அமுதே⋆



www.prapatti.com

உண்ணக் கனிகள் தருவன்⋆ கடிப்பொன்றும்
நோவாமே காதுக்கிடுவன்⋆
பண்ணைக் கிழியச் சகடம் உதைத்திட்ட⋆
பற்பநாபா! இங்கே வாராய் (11)

வா என்று சொல்லி என் கையைப் பிடித்து⋆
வலியவே காதில் கடிப்பை⋆
நோவத் திரிக்கில் உனக்கிங்கிழுக்குற்றென்⋆
காதுகள் நொந்திடும் கில்லேன்⋆
நாவற் பழம் கொண்டு வைத்தேன்⋆ இவை ஆணாய்
நம்பீ⋆ முன் வஞ்ச மகளைச்
சாவப் பால் உண்டு சகடிறப் பாய்ந்திட்ட⋆
தாமோதரா! இங்கே வாராய் (12)

‡வார் காது தாழப் பெருக்கி அமைத்து⋆
மகரக் குழையிட வேண்டிச்⋆
சீரால் அசோதை திருமாலைச் சொன்ன சொல்⋆
சிந்தையுள் நின்று திகழப்⋆
பார் ஆர் தொல் புகழான் புதுவை மன்னன்⋆
பன்னிரு நாமத்தால் சொன்ன⋆
ஆராத அந்தாதி பன்னிரண்டும் வல்லார்⋆
அச்சுதனுக்கடியாரே (13)

‖ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com